# 2006–2007 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகள்

## அறிவிப்பு 47

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நிலவி வரும் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் இந்த ஆண்டே செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். இதன் மூலம் இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம், கீழக்கரை மற்றும் சிவகங்கை ஆகிய 5 நகராட்சிகள், முதுகுளத்தூர், மண்டபம், சாயல்குடி, கமுதி, தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம், திருப்பத்தூர், அபிராமம், இளையான்குடி, நெற்குப்பை, பொன்னமராவதி ஆகிய 11 பேரூராட்சிகள் மற்றும் சிவகங்கை புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வழியோர குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 3163 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும். இதன் மூலம் மூலம் சுமார் 16 இலட்சம் மக்கள் நிரந்தரமாக குடிநீர் வசதிகளைப் பெறுவார்கள்.

## அறிவிப்பு 48

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 1,005 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை விரைவுபடுத்தியுள்ளது.

## அறிவிப்பு 49

இந்தத் திட்டம் செயலுக்கு வரும்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் ஆகிய 3 நகராட்சிகள், காரிமங்கலம், அரூர், கடத்தூர், பாப்பிரெட்டிபட்டி, பாலக்கோடு, பர்கூர், ஊத்தங்கரை, தென்கனிக்கோட்டை உள்ளிட்ட 17 பேரூராட்சிகள் மற்றும் 6,755 குடியிருப்புகள் பயன்பெறும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

## அறிவிப்பு 51

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

## அறிவிப்பு 52

70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்லடம் நகராட்சி, 29 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்புகளுக்கு சுமார் 9 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

## அறிவிப்பு 53

49 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 54**

30 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 55**

பெரம்பலூர் மாவட்டத்தில் 44 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், செந்துறை, வேப்பூர், திருமானூர், ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 636 குடியிருப்புகளுக்கு சுமார் 4 இலட்சம் மக்கள் பயன்பெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 56**

திருநெல்வேலி மாவட்டத்தில் 43 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய பேரூராட்சிகள், வாசுதேவநல்லூர், பாப்பாகுடி ஒன்றியங்களைச் சார்ந்த 78 குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 57**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 42 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகள் அறந்தாங்கி நகராட்சி மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 120 குடியிருப்புகளுக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 58**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 28 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 79 கடலோர குடியிருப்புகள் மற்றும் 17 பேரூராட்சிகள், 19 வழியோரக் குடியிருப்புகளுக்கான சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 59**

14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதுக்கடை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மூஞ்சிறை குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படும்.

**அறிவிப்பு 60**

நீலகிரி மாவட்டத்தில் 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேரன்கோடு ஊராட்சிக்கு 38 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

**அறிவிப்பு 61**

திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 13 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருத்தணி மற்றும் அரக்கோணம் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 62**

திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் விரிவாக்க திட்டம்.

**அறிவிப்பு 64**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

**அறிவிப்பு 65**

திருவள்ளூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெற்குன்றம் மற்றும் 48 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 66**

வேலூர் மாவட்டத்தில் ரூ.900 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புர மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 67**

திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழ்பெண்ணாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 68**

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

**அறிவிப்பு 69**

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

**அறிவிப்பு 70**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள விடுபட்ட மற்றும் விரிவாக்க பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

**அறிவிப்பு 71**

4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கரூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

**அறிவிப்பு 72**

25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 73**

ஈரோடு மாவட்டத்தில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கான முத்தூர்–காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 74**

சேலம் மாவட்டத்தில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

**அறிவிப்பு 75**

100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நரசிங்கபுரம் நகராட்சி, 12 பேரூராட்சிகள் மற்றும் ஏழு ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 76**

நாமக்கல் மாவட்டத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிப்பாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

**அறிவிப்பு 77**

மதுரை மாவட்டத்தில் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலூர் நகராட்சி, எ.வெள்ளாளபட்டி பேரூராட்சி மற்றும் ஏழு ஒன்றியங்களைச் சார்ந்த 1332 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 78**

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பரங்குன்றம் நகராட்சி மற்றும் ஹார்விபட்டி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

**அறிவிப்பு 79**

விருதுநகர் மாவட்டத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 80**

தூத்துக்குடி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் மற்றும் பெருங்குளம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**அறிவிப்பு 81**

திருநெல்வேலி மாவட்டத்தில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் தச்சநல்லூர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

**அறிவிப்பு 82**

11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

**அறிவிப்பு 83**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம்.

**அறிவிப்பு 84 முதல் 87 வரை**

கூட்டுக் குடிநீர் திட்டங்களில் 12 மணி நேரத்திற்கும் அதிகமாக இயங்க வேண்டிய திட்டங்களுக்கும் அதுபோல் ஒன்றுக்கு மேற்பட்ட துணை மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறும் திட்டங்களுக்கும் தங்கு தடையின்றி மின்சாரம் பெற ஏதுவாக தனி மின் பாதை புதிதாக அமைக்கப்படும்.

**அறிவிப்பு 88**

மாவட்டங்களில் உள்ள குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பு கோட்டங்கள் மற்றும் உப கோட்டங்களை மாவட்ட ஆட்சியரின் நேரடி நிர்வாக கண்காணிப்பின் கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது

**பணியாளர்களுக்கான நலத் திட்ட அறிவுப்புகள்**

**அறிவிப்பு 94**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் C & D பிரிவு பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004–05–க்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை உடனடியாக அவர்களுக்கு வழங்கப்படும். இதனால், சுமார் 8000 பணியாளர்கள் பயனடைவார்கள். அரசுக்கு கூடுதலாக 2 கோடி ரூபாய் செலவாகும்.

**அறிவிப்பு 95**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போது தொகுப்பூதியப் பணியாளர்களாகப் பணி புரிந்து வரும் 881 பணியாளர்கள் காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்படுவார்கள்.
செயலாக்கத்திலுள்ள திட்டங்களின் விவரங்கள்